Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 3/2014

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜா | Father/Husband Name | : கதிர்வேலன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 13.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 13 day of 05.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது ஜெயங்கொண்டநிலையில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 20.06.2012ம் தேதி இரவு சுமார் 12.00 மணியளவில் குளிச்சேவல்பட்டியில் உள்ள ஆத்துக்கால் மடை ஓரத்தில் எனது வயலிற்கு செல்வதற்காக எனது இரு சக்கர வாகனம் பதிவெண் TN 63 AA 1779, Bajaj Discover வண்டியில் எனது சாம்சங் செல்போனை வைத்துவிட்டு மோட்டார் திறந்துவிடுவதற்காக சென்றேன். 1/2 மணிநேரம் கழித்து மோட்டர் போட்டுவிட்டு வந்து பார்த்தபோது எனது இருசக்கர வாகனத்தை காணவில்லை. நான் எனது ஊருக்கு சென்று வண்டியை தேடினேன். எனது மாப்பிள்ளை, மச்சான் விளையாட்டிற்கு ஒளித்து வைத்திருப்பார்கள் என்று தேடிவிட்டு 4, 5 நாட்கள் கழித்து 25.06.2012ம் தேதி காலை 09.00 மணியளவில் கீழவளவு காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** போலீசார் என்னை விசாரித்துவிட்டு அனுப்பிவைத்துவிட்டார்கள். அதன்பின்னர் 10.07.2012ம் தேதி மாலை 06.00 மணிக்கு காவல் நிலையத்திலிருந்து எனது வண்டி மற்றும் செல்போன்

கிடைத்துவிட்டதாக தகவல் சொல்லி காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள். மறுநாள் 11.07.2012ம் தேதி காலை 09.00 மணிக்கு கீழவளவு காவல் நிலையத்திற்கு சென்றேன். எனது இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை காட்டினார்கள், அதை என்னுடையதுதான் என்று ஊர்ஜிதம் செய்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் வழக்கில் திருட்டுபோன இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை அடையாளம் காட்டும் புகைப்படத்தில் உள்ள செல்போன் மற்றும் இருசக்கர வாகனம் என்னுடையதுதான். **(அந்த இருசக்கர வாகனத்தை அடையாளம் காட்டும் புகைப்படம் 3 எண்ணிக்கை அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது ). (அந்த செல்போனை அடையாளம் காட்டும் புகைப்படம் 1 எண்ணிக்கை அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). 4 நபர்களிடமிருந்து எனது செல்போனையும், இருசக்கர வாகனத்தையும் கைப்பற்றியதாக சொன்னார்கள். எனது செல்போனையும், இருசக்கரவாகனத்தையும் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**3ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. இத்துடன் குறுக்குவிசாரணை முடித்துவைக்கப்படுகிறது.